செய்தி வெளியீடு எண்: 199 நாள்: 10.03.2020

# மார்ச்சு 11–இல் தமிழ் அகராதியியல்நாள் நிறைவுவிழா ! தூய தமிழ்ப் பற்றாளர்களுக்கு அமைச்சர்கள் பரிசளிப்பு!

தமிழ்மொழியின் முன்னேற்றமே தமிழர்களின் முன்னேற்றமாகும். தமிழர்களின் முதல் அடையாளமாக விளங்கும் தமிழ் மொழியை முன்னேற்ற அதன் சொல்வளத்தைப் பெருக்கி, பாதுகாக்க வேண்டும். அதற்கு அகராதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

அகராதிகள்தான் சொற்களையும், அதன்வழியே மொழியையும், மொழியின்வழியே மக்களின் வரலாற்றையும் பாதுகாக்கும் காலக்கருவூலங்களாகும்.

செய்யுள் வடிவில் சொல்லுக்குப் பொருள்சொல்லும் நிகண்டுகளே காலப்போக்கில் அகராதிகளாக வளர்ச்சிபெற்றன. இந்நிலையில், சதுரகராதியை இயற்றி தற்போதுள்ள தமிழ் அகராதி அமைப்பு முறைக்கு முன்னோடியாக விளங்கியவர் வீரமாமுனிவராவார்.

அவரின் தமிழ்த் தொண்டைப் போற்றும் வகையில், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் சார்பில், தமிழ் அகராதியியல் நாள் நிறைவு விழா, கிண்டியிலுள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக அரங்கில் 11.03.2020, புதன்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு நடைபெறும் பன்னாட்டுக் கருத்தரங்கத்திற்கு, வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கத் தலைவர் செவாலியர் டாக்டர் வி.ஜி. சந்தோசம் அவர்கள் தலைமையேற்க, அடையாறு மாணவர் நகலகக் குழும நிருவாக இயக்குநர் திரு. சா. அ. சௌரிராசன் முன்னிலை வகிக்க உள்ளார். பன்னாட்டுக் கருத்தரங்க அமர்வில், வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் தி.மு. அப்துல்காதர் அவர்கள் ‘வாழ்வியற் கலைச்சொற்கள்’ எனும் தலைப்பிலும், சட்டமொழி ஆணைய உறுப்பினர் முனைவர் மு. முத்துவேலு அவர்கள் ‘சட்டச் சொல்லகராதி’ எனும் தலைப்பிலும், இலயோலா கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மேரி சொர்ணாம்பாள் ‘சங்க இலக்கியங்களில் கலைச்சொற்கள்’ எனும் தலைப்பிலும், கார்க்கி ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் முனைவர் மதன்கார்க்கி ‘மின்னகராதி’ எனும் தலைப்பிலும், தமிழ் இந்து நாளிதழின் உதவி செய்தி ஆசிரியர் திரு. மானா பாஸ்கரன் ‘ஊடகத்துறைக் கலைச்சொற்கள்’ எனும் தலைப்பிலும், இலங்கைத் தமிழ் அறிஞரும் யாழ்ப்பாணம் மக்கள் இதழியல் இயக்கத் தலைவருமான திரு. தேவநாயகம் தேவானந்த் அவர்கள் இதழியல் கலைச்சொற்கள் எனும் தலைப்பிலும் கருப்பொருளுரை நிகழ்த்தவுள்ளனர். அகரமுதலித் திட்ட இயக்ககத் தொகுப்பாளர் திருமதி ஜெ. சாந்தி நன்றியுரை கூறவுள்ளார்.

மாலையில் நடைபெறும் நிறைவு விழாவில், தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறையின் அரசு செயலாளர் திரு. மகேசன் காசிராஜன் அவர்கள் வரவேற்புரை வழங்க, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு (ம) தொல்லியல்துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள், சொற்குவை மாணவத் தூதுவர்களுக்கான நியமன மடல்களை வழங்கியும், புதிய தமிழ்க் கலைச்சொற்களை அறிமுகப்படுத்தியும் தலைமையுரையாற்றவுள்ளார்.

மாண்புமிகு உணவு (ம) உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ் அவர்கள் கல்லூரி மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி ஊக்கவுரையாற்றவுள்ளார்.

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் நலன் (ம) நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் தூயதமிழ்ப் பற்றாளர்களுக்குப் பரிசு வழங்கி, அகராதி ஆய்வு மலரை வெளியிட்டுச் சிறப்புரையாற்றவுள்ளார்.

தமிழ்நாடு, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக மாண்பமை துணை வேந்தர் மருத்துவர் சுதா சேஷையன் அவர்கள், அகரமுதலி இயக்ககத்தில் சொல்லாக்கப் பயிற்சி பெற்ற கல்லூரி மாணவிகளுக்குச் சான்றிதழ்களை வழங்கி மகிழ்வுரையாற்றவுள்ளார்.

தொல்லியல்துறை முதன்மைச் செயலாளரும், ஆணையருமான திரு. த. உதயச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்க, அகரமுதலி இயக்குநர் திரு. தங்க காமராசு அவர்கள் நன்றியுரை கூறவுள்ளார்.

விழாவின் பிற்பகல் நிகழ்வாக கனடா நாட்டைச் சார்ந்த திருமதி மேரி இளங்கோவன் அவர்களின் தமிழிசை நாட்டிய நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. அதில், புதுதில்லியைச் சார்ந்த குரு. கோ. இளங்கோவன் அவர்கள் தமிழிசை பாட, கனடா நாட்டைச் சார்ந்த திரு. கோ. வாசுதேவன் அவர்கள் மிருதங்கமும், சென்னையைச் சேர்ந்த திரு. இரா. ஈஸ்வர் அவர்கள் வயலினும் இசைக்க உள்ளனர். விழாவில் மாநிலக் கல்லூரி, இலயோலாக் கல்லூரி, விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் சென்னை மயிலாப்பூர் கமலா இசைக்கல்லூரி ஆகிய கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் மருத்துவர்களும், தமிழறிஞர்களும், மொழி ஆய்வாளர்களும், தமிழார்வலர்களும், பேராசிரியப் பெருமக்களும், கவிஞர்களும் ஊடகவியலாளர்களும், மருத்துவம் மற்றும் கல்வியியல் கல்லூரி மாணவர்களும், பள்ளி மாணவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சொற்களைப் பாதுகாத்து மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு செல்வதே அகராதித் துறையின் முதன்மைப் பணியாகும். அயல்நாட்டவராகப் பிறந்து நம் அன்னைத் தமிழ்மொழியில் சிறந்த அகராதிகளைப் படைத்துத் தமிழ்த் தொண்டாற்றிய வீரமாமுனிவரின் நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசால் கொண்டாடப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வைப் பற்றிய செய்தியைத் தங்கள் ஊடகத்தின் (செய்தித் தாள்/தொலைக்காட்சி) இன்றைய நிகழ்ச்சிப் பகுதியில் வெளியிடுவதோடு விழாவிற்குத் தங்கள் செய்தியாளர்களையும் அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**